**பாஸ்காக் காலத்தின் இரண்டாம் ஞாயிறு**

**திருவழிபாடு ஆண்டு - C**

**2022-04-24**

(*இன்றைய வாசகங்கள்:*

*திருத்தூதர்பணி நூலிலிருந்து வாசகம்* 5:12-16,

*திருப்பாடல்கள்* 118:2-4, 22-27,

*திருவெளிப்பாடு நூலிலிருந்து வாசகம்* 1:9-11, 12-13, 17-19,

*யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 20:19-31)

**திருப்பலி முன்னுரை**

*உங்களுக்கு அமைதி உரித்தாகுக!*

*அன்புக்குரியவர்களே, பாஸ்கா காலத்தின் இரண்டாம் ஞாயிறு திருவழிபாட்டுக்கு நம் ஆண்டவர் பெயரால் உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கிறோம். நாம் இன்று இறை இரக்கத்தின் ஞாயிறை சிறப்பிக்கின்றோம். இறைமகன் இயேசு இந்த நாளில்தான் திருத்தூதர்கள் வழி யாக, திருச்சபைக்கு பாவமன்னிப்பு வழங்கும் அதிகாரத்தை வழங்கினார். இறைவனின் இருப்பை கேள்வி கேட்கும் அளவுக்கு சந்தேகம் கொண்டிருந்தாலும், அவர் நம் மீது இரக்கம் கொண்டு அவரது உடனிருப்பை உணர்த்துகிறார் என்பதை புரிந்துகொள்ள இன்றைய நற்செய்தி அழைப்பு விடுக்கிறது. கிறிஸ்து இயேசுவின் உயிர்ப்பை காணாமலே நம்பவும், அவருக்கு சான்று பகரவும் அழைக்கப்பட்டுள்ள நாம் விசுவாசத்தில் வளர வரம் வேண்டி, இந்த திருப்பலியில் பக்தியுடன் பங்கேற்போம்.*

***விசுவாசிகள் மன்றாட்டுகள்:***

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

***உயிர் அளிப்பவரே இறைவா,***

*உம் திருமகனின் உயிர்ப்பில் நம்பிக்கை கொண்டு தோன்றி வளர்ந்த திருச்சபை உலக மக்கள் அனைவராலும் ஏற்கப்பட்டு, புனிதமான மக்களை உமக்காக உருவாக்க வரமருள வேண்டுமென்று, உயிர்த்த இயேசுவின் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.*

***அன்புத் தந்தையே எம் இறைவா!***

*உக்ரைன் ரஷ்யா போர் விரைவில் முடிவு பெறவும்; அமைதியான சூழல் ஏற்படவும், போரின் பாதிப்புக்கள் விரைவில் சீரடையவும், வன்முறைகள் முற்றுப்பெறவும் வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

***ஞானத்தின் உறைவிடமான எம் இறைவா!***

*போரினால் பலவித இழப்புக்களைச் சந்திக்கின்ற மக்களை ஒப்புக்கொடுக்கின்றோம். அன்பான மனிதர்களை, உடல் உறுப்புக்களை, உடமைகளை, நிம்மதியை, மன மகிழ்ச்சியை, வேலைகளை இன்னும் பலவற்றை இழந்து தவிப்போருக்கு ஆறுதலாகவும்; ஆதரவாகவும் நீரே இருக்க வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

***நல் ஆயனே! எம் இறைவா!***

*கருத்து வேறுபாடுகள் ஏற்படுகின்றபோது சண்டைகளை விடுத்து அமைதிப் பேச்சு வார்த்தைகளில் தீர்வு காணவும், மக்களின் அமைதியான வாழ்வையும், நலனையும் குறித்து அக்கறை கொள்ளவும், எங்கள் தலைவர்களை வழி நடத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

***நிறைவு தருபவராம் இறைவா,***

*உயிர்ப்பை கொண்டாடி மகிழுகின்ற நாங்கள் உயிர்ப்பு தரும் நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பினை உணர்ந்திடவும், பாவம், நோய், ஏழ்மை, வன்முறை, மதவெறி, தீவிரவாதம் போன்றவற்றால் வீழ்ந்து கிடக்கும் அனைவரும், மரணத்தை வென்று உயிர்த்தெழுந்த உம் திருமகனைப் போல,புது வாழ்வுக்கு உயிர்த்தெழ உதவிபுரிய வேண்டுமென்று, உயிர்த்த இயேசுவின் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.*

***நிலைவாழ்வுத் தரும் ஊற்றாகிய எம் இறைவா!***

*கொரோனா வைரஸ் நோயால் பாதிக்கப்பட்ட உலக நாடுகளின் மக்களைக் கண்ணோக்கியருளும். அவர்கள் அனைவரும் விரைவில் குணமடையவும், இந்நோய் முற்றிலும் நீங்கிடவும், இத்தவக்காலத்தில் உம் மக்கள் அனைவரும் ஆலயம் சென்று, ஒன்றிணைந்துச் செபிக்கவும் தேவையான அருளை வழங்கிட இறைவா உம்மிடம் மன்றாடுகிறோம்...*

***அன்பின் இயேசுவே,***

*உமது ஆர்வமிக்க திருத்தூதர் புனித தோமையாருக்காக நன்றி செலுத்துகிறோம். அவருக்கு நீர் வழங்கிய துணிவு, பற்றுறுதி, விசுவாசம் என்னும் கொடைகளை எமக்கும் அருள மன்றாடுகிறோம். உம்மையே எங்கள் ஆண்டவராகவும், இறைவனாகவும் அறிக்கையிட்டு, அந்த விசுவாசத்தை வாழ்ந்துகாட்ட அருள்தரவேண்டு மென்று உம்மை மன்றாடுகிறோம்.*